**செய்தி வெளியீடு எண் : 01** **நாள்: 09.01.2024**

# ஆளுநர் மாளிகை, தமிழ்நாடு - பத்திரிக்கை செய்தி

**மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் பல்கலைகழகங்களின் வேந்தர் என்ற முறையில் மாண்புமிகு இந்திய உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகள் மற்றும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய சமீபத்திய தீர்ப்புக்கு உட்பட்டு தமிழ்நாடு அரசு செயல்படும் என நம்பிக்கை வைத்து, துணை வேந்தர்கள் நியமனத்துக்கான பரிந்துரையை வேந்தருக்கு வழங்கும் மூன்று பேர் கொண்ட தேடுதல் குழுவுக்கான அறிவிக்கையை திரும்பப்பெறுகிறார். அரசியல்சாசன நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்கு ஏற்ப யுஜிசி தலைவரால் முன்மொழியப்படுபவர் உள்ளிட்ட தேடுதல் குழுக்களை இனி அரசு அமைக்கும் என்று ஆளுநர் நம்பிக்கையுடன் உள்ளார்.**

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மாநில பல்கலைக்கழகங்களின் வேந்தர் என்ற முறையில், பாரதியார் பல்கலைக்கழகம், தமிழ்நாடு ஆசிரியர் கல்விப் பல்கலைக்கழகம், சென்னை பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு துணை வேந்தர்களாக நியமனம் செய்ய தகுதியானவர்களைக் கண்டறிய தேடுதல் குழுக்களை அமைத்து அறிவிக்கை எண்.01, நாள்: 06.09.2023, அறிவிக்கை எண்.02, நாள்: 06.09.2023 மற்றும் அறிவிக்கை எண்.03 , நாள்: 06.09.2023 ஆகியவற்றை வெளியிட்டார்.

தமிழ்நாடு அரசும் சிறப்பு அரசிதழ் எண்.337, நாள்: 13.09.2023. சிறப்பு அரசிதழ் எண் 452, நாள்: 20.09.2022 மற்றும் சிறப்பு அரசிதழ் எண் 492, நாள்: 19.10.2022 ஆகிய நாட்களில் சென்னை பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், தமிழ்நாடு ஆசிரியர்கள் கல்வி பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு முறையே துணை வேந்தர்களை நியமிக்க பரிந்துரை வழங்க தேடுதல் குழுக்களை நியமித்து மூன்று அறிவிக்கைகளை அரசிதழில் வெளியிட்டது பல்கலைக்கழக மானியக்குழுவின் விதிகளுக்கு உட்பட்டு இல்லை. எனினும், மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் ரிட் மனு எண் 28147/ 2022 மற்றும் 4174/ 2023 19.12.2023 அன்று வி. பழனியப்பா Vs வேந்தரின் செயலாளர், புதுச்சேரி தொழில்நுட்ப பல்கலைக்கழகம் மற்றும் பிறர், என்ற வழக்கின் தீர்ப்பில் விதி 7.3 (ii) பல்கலைக்கழக மானியக்குழு (உயர்கல்வி ஒழுங்குமுறை 2018ல் தர பராமரிப்புக்காக பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளில் ஆசிரியர்கள் மற்றும்

பிற கல்விப் பணியாளர்களை நியமிக்க குறைந்தபட்ச தகுதி) அல்லாத வகையில் வேறெந்த தேடுதல் குழு மூலம் துணை வேந்தரை தேர்வு செய்வதை அனுமதிக்க முடியாது என்று கூறியுள்ளது.

மேற்குறிப்பிட்ட வழக்கில் மாண்புமிகு உயர்நீதிமன்றம், ''அரசாணை எண் 3, தலைமை செயலகம் (உயர் மற்றும் தொழில்நுட்பக் கல்வி), நாள்: 20.01.2021 புதுச்சேரி தொழில்நுட்ப பல்கலைக்கழக சட்டத்தின் 14(5) பிரிவின் கீழ் அமைக்கப்பட்ட "தேடுதல் குழு மூலம் புதுச்சேரி தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் நியமனத்தை அனுமதிக்க முடியாது," என்று குறிப்பிட்டது."

அந்தத் தீர்ப்பின் மூலம், மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம், புதுச்சேரி தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தை நிர்வகிப்பது தொடர்புடைய சட்டபூர்வ விதிகளில் யுஜிசி விதிமுறைகள் 2018-க்கு இணங்க எவ்வித தாமதமும் இல்லாமல் திருத்தங்களை செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு புதுச்சேரி அரசு மற்றும் புதுச்சேரி தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சட்டத்தின் தெளிவான விளக்கத்தைக் கருத்தில் கொண்டு, அரசியலமைப்பு சட்ட உரிமை மற்றும் சட்டபூர்வ தன்மைக்கு மதிப்பளித்து, தமிழ்நாடு அரசு சிறப்பு அரசிதழ் எண். 337, நாள்: 13.09.2023, சிறப்பு அரசிதழ் எண்.452; நாள்: 20.09.2022, சிறப்பு அரசிதழ் எண்.19.10.2022 ஆகிய நாட்களில் வெளியிட்ட தனது அறிவிக்கையை திரும்பப் பெற்று, மாண்புமிகு உச்ச நீதிமன்றம் மற்றும் மாண்புமிகு உயர்நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புகளுக்கு உட்பட்டும் யுஜிசி ஒழுங்குமுறைகளுக்கு உட்பட்டும் துணை வேந்தர் பதவி நியமனத்துக்காக வேந்தருக்கு பரிந்துரைக்கக் கூடிய மூன்று பேர் அடங்கிய குழுக்களை அமைக்கும் அறிவிக்கையை வெளியிடும் என்று மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களின் வேந்தர் என்ற முறையில் நம்புகிறார்.

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், தமிழ்நாட்டின் பல்கலைக்கழகங்களின் வேந்தர் என்ற வகையில், மாண்புமிகு உச்ச நீதிமன்றம் மற்றும் மாண்புமிகு உயர்நீதிமன்றங்களால் உறுதி செய்யப்பட்ட யுஜிசி உத்தரவுக்கு மதிப்பளித்து,தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களில் யுஜிசி

விதிகளுக்கு ஏற்ப செயல்படும் விதிகளை தமிழ்நாடு அரசு கொண்டு வரும் என்று மேலும் நம்புகிறார்.

மேற்குறிப்பிட்டுள்ள காரணங்களுக்காகவும், உயர்கல்வி நோக்கத்துக்காகவும் மாநிலத்தில் உள்ள லட்சக்கணக்கான மாணவர்களின் எதிர்காலம் மோசமாக பாதிக்கப்படக்கூடாது என்பதை உறுதிப்படுத்துவதற்காகவும் மேலே சுட்டிக்காட்டியபடி, தமிழ்நாடு அரசு தேவையான நடவடிக்கை எடுக்கும் என மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் நம்புவதால், அறிவிக்கை எண். 01 நாள்: 06.09.2023, அறிவிக்கை எண் 02 நாள்: 06.09.2023, அறிவிக்கை எண் 03, நாள்: 06.09.2023 ஆகிய நாட்களில் வெளியிட்ட அறிவிக்கைகளை திரும்பப் பெறுகிறார்.

---------------------------------------------------------------------------------------------------------------

**ஆளுநர் மாளிகை, சென்னை-22**
**நாள்: 09.01.2024**

**வெளியீடு :-**
**மக்கள் தொடர்பு அலுவலகம்**